**தலைப்பு 231 – கடன் இணக்கசபை திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 231 – கடன் இணக்கசபை திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் கடன் இணக்கசபை திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2024 மே 28 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 யூன் 25 இல் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கடன் இணக்கசபை திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சலை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் அதனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

#### 1.6.1 சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் நிதிக்கூற்றுக்கள் இணங்காமை

2023 நவம்பர் 30 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்குகள் வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் பின்வரும் நிகழ்வு அந்தத் தேவைப்பாடுகளிலிருந்து விலகியிருந்தது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச கணக்குகள் வழிகாட்டல்களின் 7.9 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம், அறிக்கையிடும் நிறுவனத்தின் முற்பணக் கணக்குகளின் பெறுமதியில் இருந்து வைப்பு கணக்குகளின் பெறுமதியைக் கழித்த பின்னர் ஏற்படும் வேறுபாடு நிதிக்கூற்றுக்களில் தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தின் கீழ் "திறைசேரிக்கான தேறிய சொத்துக்கள்" என வழங்கப்பட வேண்டிய போதிலும் வைப்பு கணக்கு மீதியைக் குறிப்பிடத் தவறியதால், திறைசேரிக்கான தேறிய சொத்துக்களின் தொகை ரூபா 5,275 ஆல் குறைத்துக் காட்டப்பட்டு ரூபா 2,488,903 கூட்டுமொத்தத்தை காட்டுகிறது. | வைப்புக் கணக்கு மீதி தவற விடப்பட்டதால் தேறிய சொத்துக்கள் குறைத்துக் காட்டப்பட்டுள்ளன. இதன் சரியான பெறுமதி ரூபா 2,483,628 ஆக இருக்க வேண்டும் என்பது குறித்துக்கொள்ளப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் வழிகாட்டல்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

#### (அ) வைப்புக்கள்

நிதிக்கூற்றுக்கள் தொடர்பான வைப்புக்கள் மற்றும் மீதிகளின் கணக்கீட்டின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திறைசேரி அச்சீட்டுத்தாள் SA 30 இன் பிரகாரம் வைப்பு கணக்கு மீதி ரூபா 5,275 ஆக இருந்த போதிலும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் வைப்பு கணக்கு மீதியை உள்ளடக்கத் தவறியதால், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றில் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 5,275 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | நிதி நிலைமை கூற்றை தயாரிக்கும் போது, ACA 4 இல் உள்ள வைப்பு கணக்கில் ரூபா 5,275 மீதி பதிவு செய்யப்பட்டிருந்த போதிலும் இதனை நிதிக்கூற்றில் உள்ளடக்குவது தவிர்க்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டுக்கான நிதிக்கூற்றை தயாரிக்கும் போது இவ்வாறான பிழைகளை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதென குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதி நிலைமை கூற்றில் உள்ள வைப்பு மீதி திறைசேரி அச்சீட்டுத் தாள் SA 30 இன் பிரகாரம் குறிப்பிடப்பட வேண்டும். |

#### (ஆ) ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கணக்கீட்டின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 சனவரி 19 இல் நீதி அமைச்சின் சிறைச்சாலைப் பிரிவில் இருந்து ஒரு அச்சிடல் இயந்திரம் பெறப்பட்டிருந்தது. எனினும், நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் இடமாற்றங்களின் கீழ் ரூபா 75,000 ஆக அதனை பதிவுசெய்வதற்கு பதிலாக ஆண்டுக்கான ஆரம்ப மீதியில் சேர்த்தல்களின் கீழ் இது தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டில் நீதி அமைச்சினால் வழங்கப்பட்ட நிதியல்லா சொத்துக்களின் அனைத்து மிதிகளும் அரச கணக்குகள் திணைக்களத்தின் வாய்மொழி அறிவுறுத்தல்களின் பிரகாரம் ஆரம்ப மீதிகளாக சேர்க்கப்பட்டுள்ளன. அத்தகைய பெறுவனவுகள் எதிர்காலத்தில் இடமாற்றங்களின் கீழ் குறிப்பிடப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. | நிதியல்லா சொத்துக்கள் கூற்றில் இடமாற்றங்களின் கீழ் ஆண்டுக்கான இடமாற்றங்கள் குறிப்பிடப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 11 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 67,400,000 மொத்த தேறிய நிதியேற்பாட்டில் ரூபா 15,183,681 தொகை பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் மீதமுள்ள தொகை 6 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையிலான வீச்சில் இருந்தது. | குருநாகல், கம்பஹா மற்றும் காலி கிளை அலுவலகங்கள் பரவலாக்கப்பட்டதன் காரணமாக, கடமைகளுக்காகவும் மேற்பார்வைக்காகவும் உத்தியோகத்தர்களின் தலைமை அலுவலகத்திற்கான வருகை குறைவடைவதால் பிரயாணச் செலவினங்கள் மற்றும் இணைந்த படி கொடுப்பனவுகள் மட்டுப்படுத்தப்பட்டதென குறிப்பிடப்பட்டது. மேலும், 2023 ஆம் ஆண்டிற்காக திட்டமிடப்பட்ட கிளை அலுவலகங்கள் நிறுவப்படாதமை நிதியேற்பாடுகளின் சேமிப்புக்களிற்கு பங்களித்திருந்தன. | சரியான தன்மை, வினைத்திறன் மற்றும் சிக்கனம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் மதிப்பீடுகள் உரிய கருத்தில்கொள் ளலுடன் தயாரிக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | தனியான ஒரு மூலதன செலவின விடயத்திற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 300,000 முழு நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | 2023 ஆம் ஆண்டுக்கான பாதீட்டை தயாரிக்கும் போது, பெறுமதி அதிகரிப்பு மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதற்கான எதிர்வுகூறல் மேற்கொள்ளப்பட்டதென குறிப்பிடப்பட்டதுடன் ரூபா 300,000 நிதியேற்பாடு 231-1-1-2003 இன் கீழ் குறிப்பிடப்பட்டது. எனினும், 2023 ஆம் ஆண்டில் வாகன மறுசீரமைப்பு அல்லது திருத்தங்கள் எதுவும் மேற்கொள்ளப்படாததால், முழு நிதியேற்பாடும் பயன்படுத்தப்படாமல் இருந்தது. | சரியான தன்மை, வினைத்திறன் மற்றும் சிக்கனம் ஆகியவற்றில் கவனம் செலுத்துவதன் மூலம் மதிப்பீடுகள் உரிய கருத்தில்கொள் ளலுடன் தயாரிக்கப்பட வேண்டும். |

### 2.2 கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களை ஏற்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவின விடயம் 1403 இல் உள்ள கடப்பாட்டின் பெறுமதி ரூபா 84,270 ஆக இருந்த போதிலும் இது ரூபா 12,475 ஆக பதிவு செய்யப்பட்டதால் இது நிதிக்கூற்றில் குறிப்பு (iv) இன் கீழ் ரூபா 71,795 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது. | செலவின விடயம் 1403 இன் கீழ் 2023 திசெம்பர் பட்டியலிடல் காலப்பகுதிக்கு மாத்திரமே மின்சாரம் மற்றும் தண்ணீர் விலைப்பட்டியல்களுக்கான பொறுப்புக்கள் இனங்காணப்பட்டன. பட்டியலிடல் காலப்பகுதி குறைவான நாட்களை உள்ளடக்கியிருந்ததால் அது தொடர்ந்துவரும் பட்டியலிடல் காலப்பகுதிக்கான விலைப்பட்டியலாக இனங்காணப்பட்டது. | கடப்பாடுகள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றில் சரியாக பதிவு செய்யப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளன.

| அவதானிப்புக்கள் | | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணங்காமை** | | |
| நியதிச்சட்ட ஏற்பாடுகள் | | | | |
| 2019 இன் 04 ஆம் இலக்க கடன் இணக்க (திருத்த) சட்டத்தின் 8(3) ஆம் பிரிவு | - | சட்டத்தரணியாக பத்து வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவம் உள்ளவர்கள் அல்லது இலங்கை நிர்வாக சேவையில் அல்லது நாடளாவிய சேவையில் வகுப்பு I உத்தியோகத்தர் பதவியை வகிப்பவர்கள் அல்லது பதவியை வகித்தவர்களை சபை உறுப்பினர்களாக கொண்டிருக்க வேண்டிய போதிலும் 2022 ஆகஸ்ட் 22 இல் காலி கிளைக்கு இந்த நிபந்தனைகளை பூர்த்தி செய்யாத ஒரு உறுப்பினர் நியமிக்கப்பட்டிருந்தார், மேலும் உறுப்பினரின் நியமனம் 2024 பெப்ரவரி 08 வரை நீடிக்கப்பட்டது. | சபைக்கான சகல நியமனங்களும் நீதி அமைச்சரால் வழங்கப்படுவதால், இவ்விடயம் தொடர்பில் பதில்களை வழங்க முடியாதுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடைந்துகொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தலைமை அலுவலகத்தில் 162, கொழும்பு கிளையில் 159, கம்பஹா கிளையில் 383, காலி மற்றும் குருநாகல் கிளைகளில் முறையே 212 மற்றும் 241 உட்பட 1,157 விண்ணபங்கள் இன்னும் தீர்க்கப்பட வேண்டியுள்ளன. | திணைக்களத்தின் செயலாற்றல் 2022 ஆம் ஆண்டில் 44 சதவீதமாகவும், 2023 ஆம் ஆண்டில் 49 சதவீதமாகவும் இருந்தது குறிப்பிடத்தக்கது. | வழக்குகளை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2009 ஆம் ஆண்டு வரை பொறுப்பேற்கப்பட்ட 12 தீர்க்கப்படாத வழக்குக் கோவைகள் காணப்பட்டன, அவற்றில் 7 கோவைகளுக்கு விசாரணைக்கு அவகாசம் அளிக்கப்பட்டது. அதன் பிரகாரம், 14 ஆண்டுகளுக்கும் மேலாக தீர்க்கப்படாமல் வழக்குக் கோவைகள் இருப்பது அவதானிக்கப்படுகிறது. | இந்த விடயம் குறித்து பிரதான சபை மற்றும் கிளைக் குழுத் தலைவர்களுக்கு முறையாக அறிவிக்கப்பட்டு, இந்த வழக்குக் கோவைகளை விரைவாக தீர்ப்பது குறித்து ஆலோசனைகள் மற்றும் கருத்துக்கள் கேட்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டது. | வழக்குகளை தீர்ப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 10.2 ஆம் பிரிவின் பிரகாரம் அரச நிதித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட 14 ஆம் வழிகாட்டலில் குறிப்பிடப்பட்டுள்ள வடிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வேண்டும். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 2/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 12.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்த பின்னர் 150 நாட்களுக்குள் வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2022 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்றல் அறிக்கை 2023 செப்தெம்பர் 21 இல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் அதிக எண்ணிக்கையிலான பிரதிகளை அச்சிடுவதற்கான நிதியேற்பாடுகள் போதுமானதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. எனவே, 2022.06.10 ஆம் திகதிய எல்எச்பி/பிஏ/01-2022/அறிக்கைகள் ஆம் இலக்கத்தை கொண்ட சபைத் தலைவரின் செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் அறிக்கை அச்சிடப்பட்டது. | குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இரண்டு மோட்டார் வாகனங்களுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 188,000 தொகையான ரயர்களுக்காகவும் ரூபா 224,000 தொகையான வாகன பழுதுபார்த்தல்களிற்காகவும் விலைப்பட்டியலின் கொடுப்பனவின் போது வேலை சரியாக மேற்கொள்ளப்பட்டிருந்ததென இயந்திர பொறியியலாளரின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்ளாமல் உரிய கொடுப்பனவுகள் செய்யப்பட்டன. | கொடுப்பனவுகளின் பின்னர் அவற்றை அங்கீகாரத்திற்காக முன்வைத்தமை தொடர்பாக இயந்திரப் பொறியியலாளரால் அங்கீகரிக்கப்பட்டு சிக்கல் சீர்செய்யப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. | பழுதுபார்ப்பதற்காக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் இயந்திர பொறியியலாளரின் பரிந்துரைகள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். |

### 3.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப் பிரமாணம் 880 இன் பிரகாரம் உறுதிச்சீட்டுக்களை சான்றுபடுத்துபவர்கள் அல்லது அரசாங்க கணக்கில் காசோலைகளில் கையொப்பமிடுபவர்கள் உட்பட, நிர்வாக ரீதியாக பொறுப்பான அல்லது இந்த கடமைகளை நிறைவேற்றுவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ள அரசாங்க அதிகாரிகள் தங்கள் கடமைகளை நேர்மையுடன் நிறைவேற்ற வேண்டும். எனினும், மேற்படி பிரமாணம் மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பாதுகாப்பு) கட்டளைச்சட்டம் (அத்தி. 612) மற்றும் 2011 சனவரி 18 ஆம் திகதிய நீதி அமைச்சின் 01/2011 ஆம் இலக்க சுற்றறிக்கை ஆகியவற்றின் பிரகாரம் பிணைகளை வழங்க வேண்டிய 12 அதிகாரிகள் தங்கள் பிணைகளை வழங்கியிருக்கவில்லை. | அதிகாரிகளின் பிணைக்கான விண்ணப்பங்கள் மேலதிக நடவடிக்கைகளுக்காக நீதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | குறிப்பிடப்பட்ட பிரமாணம் 880 மற்றும் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பாதுகாப்பு) கட்டளைச்சட்டத்தின் பிரகாரம் பிணைகள் வழங்கப்பட வேண்டும். |

### 3.5 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவாதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2022 ஆகஸ்ட் மாதத்தில், தலைமை அலுவலகத்தில் உள்ள வழக்குக் கோவைகள் கைமுறையாகக் கணக்கிடப்பட்டதுடன் 2023 நவம்பர் மாதத்தில், தலைமை அலுவலகம் உட்பட அனைத்து கிளை அலுவலகங்களும் தங்கள் வழக்குக் கோவைகளை கைமுறையாகக் கணக்கிட்டன. ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களுடன் ஒப்பிடும் போது 2022 இல் 248 வழக்குக் கோவைகளும், 2023 இல் 221 வழக்குக் கோவைகளும் அதிகரித்திருந்தமை கண்டறியப்பட்டது. அதன் பிரகாரம், 2023 ஆம் ஆண்டில் கைமுறை கணக்கிடலின் விளைவாக, தலைமை அலுவலகத்தில் வழக்கு கோவைகளின் எண்ணிக்கை 83 ஆல் அதிகரித்துள்ளது, அதே நேரம் கொழும்பு மற்றும் கம்பஹா கிளைகளில் | புதிய தரவு முறைமைக்கான கட்டமைப்பை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் UNDP ஈடுபட்டுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | பொருத்தமான தரவு முறைமையை அறிமுகப்படுத் துவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

முறையே 48 மற்றும் 84 வழக்கு கோவைகள் அதிகரித்துள்ளன. இந்த காலரீதியான கணக்கிடலின் போது ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களுக்கும் பௌதீக பதிவுகளுக்கும் இடையிலான முரண்பாடுகள் காரணமாக கோவைகளை பராமரிப்பதற்கு சரியான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை காணப்படாதமை அவதானிக்கப்பட்டது.

**4. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவாதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோக்கதரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 13.3 வது பிரிவின் பிரகாரம் ஒரு கணிசமான நியமனம் மேற்கொள்ளப்படும் வரை ஒரு பதவியில் செயற்படுவதற்கான நியமனம் ஒரு தற்காலிக நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், சிரேஷ்ட நிலையின் கீழ் வரும் பிரதம கணக்காளர் பதவி 2021 மார்ச் 17 முதல் வெற்றிடமாக உள்ளது, மேலும் அமைச்சின் பிரதம கணக்காளர் தற்போது இந்த பதவியின் கடமைகளில் செயற்படுகிறார். | இந்த வெற்றிடத்தை நிரப்புவதற்கு 2023.09.01 ஆம் திகதிய 3/1/24 ஆம் இலக்க எனது கடிதத்தின் மூலம் நான் கோரிக்கையை சமர்ப்பித்திருந்த போதிலும் இடமாற்றத்திற்காக கணக்காளர் சேவையின் தரம் III/I இல் தற்போது அதிகாரிகள் காணப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | இரண்டாம் நிலையில் சேர்க்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 18 ஆக உள்ள போதிலும் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 19 ஆக உள்ளது, இதன் விளைவாக 01 ஊழியர் மிகையாக உள்ளார். அதேபோன்று, முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 15 ஆக உள்ள போதிலும் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 06 ஆகும், இதனால் 9 வெற்றிடங்கள் உள்ளன. மேலும், தட்டெழுத்தாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 6 ஆக உள்ள போதிலும் உண்மையான ஊழியர்களின் எண்ணிக்கை 03 ஆக உள்ளது, இதனால் 03 வெற்றிடங்கள் உள்ளன. | மூன்று அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நீதி அமைச்சிலிருந்து தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளனர், இதன் விளைவாக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு 2 வெற்றிடங்கள் மற்றும் முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் பதவிகளுக்கு 9 வெற்றிடங்கள் உள்ளன. தட்டெழுத்தாளர் பதவிக்கு, தற்போது மூன்று உத்தியோகத்தர்கள் தற்காலிக இணைப்பில் பணிபுரிவதால், 6 வெற்றிடங்கள் மாறாமல் உள்ளன. தற்போது தேவையான ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதென தெரிவிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை உடனடியாக நிரப்புவதற்கும் அதிக எண்ணிக்கையிலான ஊழியர்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |